# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.27/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-2/PW-5 | Village: |
| Name : ஆறுமுகம் | Age :75 |
| Father's/Husband's Name : கோதண்டபாணி | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 12.11.2025**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது அம்மையப்பன் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் வயது மூப்பின் காரணமாக வீட்டில் இருந்து வருகிறேன், அசா1 எனது மகன். எதிரி ஜெய்சங்கரை எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 20.04.2008 ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எங்கள் ஊரில் சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு ஸ்ரீசுப்ரமணிய சுவாமிக்கு காவடி பால்குட ஊர்வலம் நடைபெற்றது என்றும் அப்போது ஊர்வலம் எங்கள் ஊர் முத்துகிருஷ்ணன் வீட்டிற்கு வடபுறம் வந்து கொண்டிருக்கும்போது எனது மகன் அசா1 எதிரியிடம் ஏன் வேகமாக செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு எதிரி அசா1 டம் தகராறு செய்து தகாத வார்த்தையால் திட்டினார் என்றும் அவர் கையில் வைத்திருந்த இரும்பு சுக்மா தடியால் எனது மகனின் தலையில் அடித்தார் என்றும் இச்சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**